வேண்டும் என்கிற அரசு உத்தரவை சம்பந்தப்பட்ட ஆலை முழுமையாகக் கடைப்பிடித்துக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சோழவந்தான் பேரூராட்சி, சமயநல்லூர், தேனூர் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் கலக்கின்றதா என குடிநீர் மாதிரி எடுத்து ஆய்வு செய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

94—

நூலகம்

***28168—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதி, 34-வது வட்டம், எவரெடி காலனியில் கொடுங்கையூர் எவரெடி நகர் தொழிலாளர்கள் குடியிருப்போர் பகுதியில் பகுதிநேர நூலகம் வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி, பகுதிநேர நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட யூனியன் கார்பைடு பணியாளர்கள் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் லிமிடெட் சார்பில் எவரெடி காலனியில் 2,556 சதுர அடி கொண்ட காலி மனை தானமாகப் பெறப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கான திருத்திய வரைபடம் மற்றும் மதிப்பீடு

அறிக்கை பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்று விரைவில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புதிய நூலகக் கட்டடம் கட்ட சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதிய நிதியாதாரம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்ற முன்வந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. அதை முழுநேர நூலகமாகச் செயல்படுத்த வேண்டுமென்பது எங்களுடைய ஒரு வேண்டுகோள். அந்தக் குடியிருப்போர் நலச் சங்கம், கூட்டுறவு அமைப்பு மூலமாகக் கொடுத்திருக்கிற அந்த நிலமும் அதற்குப் போதுமானதாக இருக்கிறது. அதைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலும் புதிதாக வளர்ந்திருக்கிற நகர விரிவாக்கப் பகுதி. அங்கே குடியிருப்பும் மிக அடர்த்தியாக இருக்கிறது. அங்கே reference புத்தகங்கள் போன்றவற்றையெல்லாம் பெறமுடியாத அளவுக்கு ஏழை மாணவர்கள் இருக்கிறார்கள், இப்போதைய competitive examinations இருக்கிற சூழ்நிலையிலே அந்தப் புத்தகங்களும் அதிலே இடம் பெறத்தக்க அளவிலே முழுநேர நூலகமாக மாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அப்பகுதியின் முக்கியத்துவம் கருதி, ஆய்விலே முக்கியத்துவத்தை உணர்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று அதை முழுநேர நூலகமாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போலவே 35-வது வட்டம், 37-வது வட்டம், சத்தியமூர்த்தி நகர், மகாகவி பாரதி நகர், கண்ணதாசன் நகர், முத்தமிழ் நகர் போன்ற மிக அடர்த்தியாக மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் 50,00-க்கும் மேற்பட்ட மக்கள் குடியிருக்கிற பகுதிகளிலே நூலகம் இல்லாத ஒரு குறை இருக்கிறது. இந்தப் பகுதிக்கும் இன்னொரு நூலகத்தைக் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அறிவித்த அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஒரு நூலகம் அமைக்கப்படவேண்டுமென்றால், குறைந்தது 200 உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும். 5 சென்ட் இடம் தானமாகத் தர வேண்டும். புரவலர்களாகக் குறைந்தது ஆயிரம் ரூபாய் கட்டி 2 உறுப்பினர்கள் உருவாக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் புதிதாக அமைக்கக்கூடிய அந்த நூலகத்திற்கு வாடகை இல்லாத கட்டடத்தைக் கொடுக்க வேண்டும். மேசை, நாற்காலி போன்ற தளவாடப் பொருட்களை எல்லாம் கொடுக்கப்படுமேயானால், அந்தப் பகுதியிலே புதிய நூலகம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]